
# திராவிடத்தால் வாழ்கிறோம்

870

எழுத்து: கோவி.லெனின்
ஓவியம்: கி.சொக்கலிங்கம்




-வாழ்வோம்

## திராவிட மாடல் அரசு

நீரை.மகேந்திரன்

125

# சென்னைப் புத்தகப் பூங்கா!

### சிந்தனையை உயர்த்திடும் புதிய பயணம்!



`முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் எனும் நான்' என்று உறுதிமொழி எடுத்துக்கொண்ட நாளில் இருந்து, தமிழ்நாட்டின் வளர்ச்சிக்கு நமது முதலமைச்சர் செயல்படுத்தி வரும் பல்வேறு திட்டங்களைத் தரவுகளோடு உலகுக்குப் பறைசாற்றுகிறது இந்தப் பகுதி...

‘தமிழ்நாட்டு மக்கள் வீட்டுக்கு ஒரு நூலகம் அமைக்க வேண்டும்’ என்பது பேரறிஞர் அண்ணா அவர்களின் பெருங்கனவு. முத்தமிழறிஞர் கலைஞர், அண்ணா பெயரிலேயே மாபெரும் நூலகம் அமைத்து, வாசிப்பு இயக்கத்துக்கு வலுவான தளம் அமைத்துக் கொடுத்தார். அவர்களது வழியிலான திராவிட மாடல் அரசு, மக்களிடம் வாசிப்புப் பழக்கத்தை ஊக்குவிக்க, புதிய முனைப்புகளில் ஈடுபட்டுள்ள அடையாளம்தான் **‘சென்னைப் புத்தகப் பூங்கா’**.

சென்னை மாநகரத்தின் மத்தியில், எப்போதும் பரபரப்பாக இயங்கிக் கொண்டிருக்கும் சென்ட்ரல் ரயில் நிலையத்தின் புதிய அடை யாளமாக, பள்ளிக் கல்வித்துறையின் தமிழ்நாடு பாடநூல் மற்றும் கல்வியியல் பணிகள் கழகம் அமைத்திருக்கும் ‘சென்னைப் புத்தகப் பூங்கா’ சீரிய கவனம் பெற்றுள்ளது.

### மக்கள் புழங்கும் இடத்தில் புத்தகம்!


கடந்த 2024-ஆம் ஆண்டு தமிழ்நாடு சட்டமன்றத்தின் மானியக் கோரிக்கையின்போது, சென்னையில் அனைத்து பதிப்பக நூல்களையும் ஒரே இடத்தில் விற்பனை செய்யும் வகையில், ‘புத்தகப் பூங்கா’ தொடங்கப்படும் என அறிவித்திருந்தார் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள். அதையடுத்து, விற்பனை மையத்துக்கான இடத்தைத் தேர்வு செய்யும் பணிகளை மேற்கொண்ட அரசு, அதிகமான அளவில் மக்கள் புழங்கும் சென்னை சென்ட்ரல் மெட்ரோ ரயில் நிலையத்தின் கீழ் தளத்தில், 5 ஆயிரம் சதுர அடியிலான இடத்தைத் தேர்ந்தெடுத்தது. ரூபாய் 1.85 கோடி செலவில், 5,100 சதுர அடி பரப்பளவில், 15 ஆயிரம் நூல்கள் வைக்கும் வகையில், 30 அடுக்குகளுடன் அமைக்கப்பட்ட ‘சென்னைப் புத்தகப் பூங்கா’வை கடந்த 10-ஆம் தேதி (10.06.2025) மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் திறந்து வைத்தார்.


### வெளிப்படையான அணுகுமுறை

ஒரே நேரத்தில் 15 ஆயிரம் நூல்களை விற்பனைக்கு வைக்கும் வகையில், புத்தக அடுக்குகள் அமைக்கப்பட்டுள்ளன. இந்த விற்பனையகம் மூலம் நூல்களை விற்பனை செய்வதற்கு, பதிப்பாளர்கள் வெளிப்படையான ஒப்பந்தம் மூலம் தேர்வு செய்யப்படுகின்றனர். குறிப்பாக, செய்தித்தாள் அறிவிப்பு மூலம் பதிப்பாளர்களிடமிருந்து ஒப்பந்தங்கள் கோரப்பட்டு, நூல் அடுக்குகள் ஒதுக்கப் பட்டுள்ளன. பதிப்பகங்கள் தாங்கள் கோரும் நூல்கள் குறித்தும், விற்பனைத் தொகை குறித்தும் உடனுக்குடன் வெளிப்படைத் தன்மை யான அணுகுமுறை கடை பிடிக்கப்படுகிறது.

இந்தப் புத்தகப் பூங்காவுடன் இணைந்து, நூல் வெளியீடு மற்றும் இலக்கிய நிகழ்வுகள் நடத்துவதற்கு ஏற்ப ஓர் அரங்கமும் உரிய வசதிகளுடன் அமைக்கப்பட்டுள்ளது. முன்பதிவு அடிப்படையில், இந்த அரங்கமும் பயன் பாட்டுக்கு அனுமதிக்கப்படுகிறது.

இந்தப் புத்தகப் பூங்காவில் அகராதி, அரசியல், இலக்கியம், கல்வியியல், வேளாண்மை, மருத்துவம், பொருளாதாரம், பன்னாட்டுப் பொருளாதாரம், தமிழ் வரலாறு, உலக வரலாறு, இந்திய வரலாறு, நாட்டுடைமை ஆக்கப்பட்ட நூல்கள், உயர்கல்வி நூல்கள், கீழடி தொடர்பான நூல்கள், செவ்வியல் நூல்கள், சிறார் நூல்கள், கதை, கவிதை உள்ளிட்ட பல்வகை நூல்கள் இடம் பெற்றுள்ளன. தமிழ்நாடு பாடநூல் கல்வியியல் மற்றும் பணிகள் கழகம் அச்சிட்டுள்ள பள்ளி பாடப் புத்தகங்களும் விற்பனைக்கு உள்ளன. தமிழ், தெலுங்கு உள்ளிட்ட தென்னிந்திய மொழிகள் மற்றும் அயல்நாட்டுப் புத்தகக் கண்காட்சிகள் மூலம் மொழிபெயர்க்கப் பட்ட பிற உலக மொழி புத்தகங்களும் இடம்பெற்றுள்ளன.






**வேலை நேரம் :** காலை 9 மணி முதல் இரவு 9 மணி வரை...

**அமைவிடம் :** சென்னை சென்ட்ரல் புறநகர் ரயில் நிலையம் எதிரில் அமைந்துள்ள மெட்ரோ நுழைவாயில் கீழ்தளம்.

அடுக்குகளுக்கு முன்வைப்புத் தொகை செலுத்தி, நூல்களைக் காட்சிப்படுத்தலாம்.

தற்போது ‘தமிழ்நாடு பாடநூல் மற்றும் கல்வியியல் பணிகள் கழகம்’ வெளியிட்டுள்ள நூல்கள் உள்பட முன்னணிப் பதிப்பாளர்களின் நூல்கள் விற்பனைக்கு வைக்கப்பட்டுள்ளன. இங்கு விற்பனை செய்யப்படும் நூல்களுக்கு 10 சதவிகிதம் விலைச் சலுகையும் வாசகர்களுக்கு வழங்கப் படுகிறது. நூல்கள் விற்பனைக்குப் பின், தொடர்புடைய பதிப்பகங்களுக்கு ஒருநாள் இடைவெளியில் அவர்களுடைய விற்பனைத் தொகை அனுப்பி வைக்கப்படுகிறது. அதன்மூலம், விற்பனையான



> “சிந்தனையைத் தூண்டும் அரசு, செயலூக்கம் மிக்க அரசு என்பதைச் சொல்லத் தேவையில்லை!”

புத்தகப் பூங்கா மற்றும் நூல் வெளியீட்டு அரங்கத்துடன் இணைந்த வகையில், சிற்றுண்டிச் சாலை ஒன்றும் அமைக்கப்பட்டுள்ளது. வாசகர்கள் - எழுத்தாளர்கள் சந்திப்புக்கு, கலந்துரையாடல் நிகழ்த்துவதற்கு, அந்த சிற்றுண்டி அரங்கம் அனுமதிக்கப்படுகிறது.

சென்னை போன்ற பெருநகரத்தில், மக்களிடம் வாசிப்புப் பழக்கத்தைத் தூண்டவும், அதிகரிக்கவும் இதுபோன்ற அறிவுசார் மையங்களுக்கான தேவை உள்ளது. ஏற்கெனவே, சென்னையில் ‘லேண்ட் மார்க்’ போன்ற புத்தக மையங்கள் மூடப்பட்டுள்ளன. ஹிக்கின் பாதம்ஸ், டிஸ்கவரி புக்பேலஸ் என ஒருசில பதிப்பகங்கள், விற்பனை மையங்கள் வைத்துள்ள நிலையில், தமிழ்நாடு அரசு அமைத்துள்ள ’சென்னைப் புத்தகப் பூங்கா’ பதிப்பாளர்கள், வாசகர்கள் மத்தியில் புதிய நம்பிக்கையை விதைத்துள்ளது.

புத்தகப் பூங்காவைத் திறந்து வைத்த மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள், தனது சமூக வலைதளப் பக்கத்தில் “இனி, சென்ட்ரல் மெட்ரோ, சென்னை சென்ட்ரல் ரயில் நிலையத்தில், சந்தித்துக் கொள்ளும் உறவுகளும் நட்புகளும், அன்பைப்பரிமாறிக்கொள்வதைப் போல், புத்தகங்களைக் கொண்டு அறிவைப் பரிமாறிக்கொள்ள சென்னைப் புத்தகப் பூங்காவைத் தொடங்கியுள்ளோம்! சிந்தனையை உயர்த்திடும் நூல்கள் நமது (வாழ்க்கைப்) பயணங்களில் துணையாகட்டும்!” எனப் பதிவிட்டு வாழ்த்தினார். சிந்தனையைத் தூண்டும் அரசு, செயலூக்கம் மிக்க அரசு என்பதைச் சொல்லத் தேவையில்லை!

...சாதனை தொடரும்

## சமூகநீதி இலக்கை எட்டும் `நான் முதல்வன்'!



**ச**மீபத்தில், விஜய் தொலைக் காட்சியின் ‘நீயா நானா’ விவாத நிகழ்ச்சியில், அரசுத் திட்டத்தில் பயன்பெறும் மாணவர்கள் கலந்து கொண்டனர். நிகழ்ச்சியில், “எந்தத் திட்டத்தை அரசு விட்டுவிடவே கூடாது என நினைக்கிறீர்கள்?” என மாணவர்களை நோக்கி நெறியாளர் கேள்வி எழுப்பினார். அப்போது பதிலளித்த அரசுப் பள்ளி மாணவி ஒருவர், ‘நான் முதல்வன் திட்டம்’ என்று சட்டென பதிலளித்தார். “நான் முதல்வன் திட்டத்தில் அளிக்கப்படும் உயர்கல்வி வழிகாட்டி திட்டம் தங்களுக்கு மிகவும் உதவிகரமாக உள்ளது” என அந்த மாணவி அளித்த விளக்கம் பரவலாக கவனம் பெற்றது.

அதற்கு களத்தில் இருந்து கிடைத்த சான்றாக உள்ளார் விருதுநகர் மாவட்டத்தைச் சேர்ந்த மாற்றுத்திறனாளி மாணவி யோகேஸ்வரி. சாத்தூர் அருகே உள்ள படந்தால் என்ற கிராமத்தில், அரசு மேல்நிலைப் பள்ளி மாணவியான இவர், தமிழ்நாடு அரசின் ‘நான் முதல்வன்’ திட்டத்தின், கல்லூரி கனவு வாயிலாக ஜே.இ.இ.(JEE) நுழைவுத்தேர்வுப் பயிற்சியும், வழிகாட்டுதலும் பெற்று, தேர்விலும் தேர்ச்சி பெற்றுள்ளார். கூலித் தொழிலாளியின் மகளான இவருக்கு, தற்போது மும்பை ஐ.ஐ.டி. கல்லூரியில் விண்வெளிப் பொறியியல் (Aerospace Engineering) படிக்கும் வாய்ப்பு கிடைத்துள்ளது.

விருதுநகர் மாவட்ட ஆட்சியர் அந்த மாணவியை அழைத்துப் பாராட்டியதுடன், தனது விருப்ப உரிமை நிதியிலிருந்து 5,000 ரூபாய் வழங்கி வாழ்த்தியுள்ளார். ஐ.ஏ.எஸ்., ஐ.பி.எஸ்., ஐ.எஃப். எஸ். உள்ளிட்ட குடிமைப் பணிகளுக்கான முதல் நிலைத் தேர்விலும் நான் முதல்வன் திட்டத்தில் படித்த 315 மாணவர்கள் நடப்பாண்டு தேர்ச்சி பெற்றுள்ளனர். இந்த வெற்றிகள், தமிழ்நாடு அரசின் சமூகநீதி இலக்கை நாள்தோறும் உறுதிப்படுத்திக் கொண்டிருக்கிறது என்றால் மிகையில்லை.

## ஃப்ளாஷ்பேக்



### அப்பாவின் வழியில் கழகமே மூச்சு!



மு.பி.பா. அன்புச்செழியன்

2014-ஆம் ஆண்டு, எனது தந்தையார் கழக முன்னோடி பேராசிரியர் மு.பி.பால சுப்ரமணியன் அவர்கள், தனது 75-ஆம் ஆண்டு பிறந்த நாளில் கழகத் தலைவர் முத்தமிழறிஞரிடம் வாழ்த்து பெற விரும்பினார். அதையடுத்து தந்தை, அம்மா, சகோதரி, நான் மற்றும் எனது குழந்தைகளுடன் சென்று தலைவரைக் கண்டு மகிழ்ந்தோம். தலைவர் வரவேற்று, அப்பாவுடன் சற்று நேரம் உரையாடி வழியனுப்பி வைத்தார். அப்பாவின் வழியில் என்றும் கழகமே என் மூச்சு என்பதில் பெருமைப்படுகிறேன்.

**- மு.பி.பா.அன்புச்செழியன் எம்.பி.ஏ, பேரின்பம் பாலர் பள்ளி நிறுவனர், தலைவர், செங்கல்பட்டு.**

இது போன்ற அரிய புகைப்படங்களை சிறுகுறிப்புடன் எங்களுக்கு அனுப்புங்கள். அலைபேசி எண் அவசியம்.
அனுப்ப வேண்டிய முகவரி: அன்பகம், 614, அண்ணா சாலை, தேனாம்பேட்டை, சென்னை - 600 018.
வாட்ஸ்அப் எண் : 90033-24473 மின்னஞ்சல்: youthwing@dmk.in

## கருவூலம்

### நீதிக்கட்சி ஆட்சியில்...

நீதிக்கட்சி ஆட்சியில்தான், அறநிலையப் பாதுகாப்புச் சட்டம் நிறைவேற்றப்பட்டது. ஆந்திரப் பல்கலைக்கழகமும், அண்ணாமலை பல்கலைக்கழகமும் ஏற்படுத்தப்பட்டன. கைத்தொழிலுக்கு உதவியளிக்க சட்டம் நிறைவேற்றப் பட்டது. உள்நாட்டு மருத்துவத்திற்கு ஆதரவளிக்கப்பட்டு, அதற்காகத் தனியே ஒரு கல்லூரியும் நிறுவப்பட்டது.

Published and Printed by Karthikeyan Shanmugasundaram On behalf of Murasoli Trust at Murasoli Achagam, No:180, Kodambakkam High Road, Chennai - 600 034 Editor : Karthikeyan Shanmugasundaram Regn. No.7436, TN/CH (C) 261/24 - 26 RNI No.1244/57 WPP.No.TN/P.M.G. (CCR) W.P.P. 355/24-26. Phone : 28179191, 28179131